திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி 42 வது வார்டில் 24 லட்சம் ரூ. மதிப்பீட்டில் ஈம காரிய மண்டபத்தை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி. உதயகுமார், மாநகராட்சி ஆணையர் சரண்யா, மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர் சத்திய கோ.ரவி, மற்றும் திமுக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் திருவள்ளூரில் 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எம்.சீனிவாசன், ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.செல்வராஜ், வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன்,. ஆர்.வரதன், குருதாஸ், ப.சிட்டிபாபு, பிரகாஷ்ஞான ஒளி, ம.கிரண், டி.என்.ஆர்.சீனிவாசன், என்.பரசுராமன், கைலாசம் வி.எம்.ஆர். நரேந்திரன், கே.பி.தமிழ்ச்செல்வன், ஆர்.சசிகுமார், இ.சதாசிவம், எல்.மோகன், பி.கேசவன், கே.வி.மனோகரன், கே.எம். துரைமுருகன், டி.கே. பாபு, ம.புவனேஷ் குமார், டி.ஆர். திலீபன், ஜி. சித்திக் அலி, ஜி.வேலாயுதம், ஜெய் கிருஷ்ணன், அயுப் அலி, கு.பிரபாகரன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தவறவிட்ட தங்க நகைகளை

திரும்பக் கொடுத்த திருவாரூர் தூய்மைப் பணியாளர்!

பாராட்டி கவுரவித்து ரூ.4 லட்சம் சன்மானம் கொடுத்த பூண்டி கலைவாணன்!

திருவாரூர்,பிப்10.

திருவாரூரில் மகளின் திருமணத்திற்கு என வாங்கப்பட்ட 20பவுண் தங்க நகைகளை தவறவிட்டவரிடம் , கீழே கிடந்த நகைகளை மீட்டெடுத்து, சேர்ப்பித்த நகராட்சி தூய்மை பணியாளர் துரை அவர்களின் செயலை பாராட்டும் விதமாக அவருக்கு மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் அவரது குடும்பத்திற்கு மருத்துவ செலவுக்கு என 4 லட்சம் ரூபாயை கொடுத்து ஊக்கப்படுத்தியுள்ளார்.

திருவாரூரை சேர்ந்த ராதாகிருஷ்ணன் முத்துலட்சுமி தம்பதியர் தங்கள் மகளுக்கு திருமணம் என்பதால் அதற்கென 20பவுண் தங்கநகைகள் மற்றும் 1கிலோ வெள்ளி ஆகியவற்றை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு திரும்பிய போது, அந்த நகைகளை தவறவிட்ட நிலையில்,அந்த நகைகளை திருவாரூர் நகராட்சி பணியாளர் துரை என்பவர் கண்டெடுத்து, அதன் உரிமையாளரிடம் காவல் துறையினர் முன்னிலையில் பத்திரமாகசேர்த்தார்.

இந்த தகவலை அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.அவர்கள் நகராட்சி பணியாளரை அழைத்து, அவரை பாராட்டியாதோடு அவரின் குடும்பநிலை குறித்து அறிந்து, அந்த எழமை நிலையிலும் அவரது நேர்மையை பாராட்டும் விதமாக , அவரது மகனின் மருத்துவ சிகிக்கைக்காக 4 லட்சம் ரூபாயை அவருக்கு அன்பளிப்பாக அளித்தார்.

இந்த நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், காவல் கண்காணிப்பாளர் கருண்காரட் ,மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, ஒன்றிய செயலாளர் சேகர் என்கிற கலியபெருமாள் ,நகர செயலாளர் வாரை. பிரகாஷ், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஷோபா கணேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 355 வது நாள்!

துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,பிப்.10-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 355 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (9.2.2026), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி வட்டம் 55 எல்லையம்மன் கோயில் அருகில் எழுகிணறு தெரு, 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம்: 57, யானை கவுனி மேம்பாலம், ஜட்காபுரம் சந்திப்பு, சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஆயிரம் விளக்கு – 117 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

டி.ராகேஷ்குமார் - டி.நளினி திருமண வரவேற்பு விழா!

தேனா எல், தவமணி தலைமை! ஆ.ராசா எம்.பி, – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, பிப்.10-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்லாசியுடன் ஆயிரம் விளக்கு பகுதி 122 வது முன்னாள் வட்ட பொருளாளர் சி.ராமச்சந்திரன் - ரங்கநாயகி அவர்களின் பேரனும் ஆர். தியாகராஜன் - கிரேசி அவர்களின் மகனும் 117 வது ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ராகேஷ்குமார் - டி.நளினி திருமண வரவேற்பு விழா இன்று (10.02.2026 செவ்வாய் கிழமை) மாலை 7.30 மணி அளவில், சமுதாய நலக்கூடம் கிரியப்பா சாலை தி. நகர் சென்னை-17-ல் தலைமை : 117 ‘அ’ வட்ட கழக செயலாளர் தேனா எல்.தவமணி, சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை திருமலை பொன்னுரங்கம் எம்.சி. ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக துணை பொதுசெயலாளர் ஆ.ராசா எம்.பி., மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவரணி செயலாளர் டாக்டர் எழிலன் நாதன் எம்.எல்.ஏ., தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ். முருகன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் சைதை சாதிக், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜெ.சரவணன், வழக்கறிஞர் பா.பிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் இளைஞர் அணி ஜெ.எம்.எச். இம்ரான், சென்னை மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் இளைஞர் அணி என். மோகனவேல், சென்னை மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் இளைஞர் அணி வரவேற்புரை : எம்.டி. மணிபாலன் ஜெ. சிவலிங்கம் சி.வினோத்குமார் எஸ்.பத்மா செல்வம் ஏ.சதாசிவம் எஸ்.சுந்தரேசன் எஸ்.. சரவணன் ஆத். ஷர்மிளா எஸ்.சுரேந்தர் ஜி.சிவராமன் எஸ்.சதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

ஜெ.ஏ.புவனேஷ், ஸ்ரீவட்சன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் கே. சந்துரு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர். டி.மணிமாறன் வட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்: வி.சுரேஷ்பாபு ஜி.வி. கணேஷ், ஆர்.சந்திர பிரகாஷ், பி.மோகன்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிட்லபாக்கம் முத்துலஷ்மி நகர் பொது நலசங்கத்தின் 35வது ஆண்டு விழாவில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாநகர அயலக அணி அமைப்பாளர் துரை. இரா.சிவக்குமார் தாம்பரம் மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் இரா.விஜயகுமார், மாமன்ற உறுப்பினர் சி.ஜெகன், சி.பரிமளா, ச.ஜெகநாதன் மற்றும் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் எல். சுந்தரராமன், எஸ்.சேகர், டி.சிவய்யா, வி.யோகானந்த், ஆர்.எம்.ஈஸ்வரன் பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், பிப்ரவரி 12/02/2026 வியாழக்கிழமை அன்று திருச்சி தெற்கு மாவட்ட முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து. தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து கீழ்கண்ட மாநகர, ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்களில் 12.02.2026-வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், பகுதி ஒன்றிய நகர பேரூர் வட்ட வார்டு கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் தொண்டர்கள் என திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

வ. எண்	மாநகரம் / பகுதி / ஒன்றியம் / நகரம் / பேரூர்	தலைமை	சிறப்புரை	நடைபெறும் இடங்கள்
1.	மணப்பாறை ஒன்றியம்	C.ராமசாமி	P.M.சபியுல்லா	புத்தாநத்தம் தபால் நிலையம்
2.	மருங்காபுரி வடக்கு ஒன்றியம்	C.செல்வராஜ்	N.செந்தில்	வளநாடு, கைகாட்டி, பிராம்பட்டி தபால் நிலையம்
3.	திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம்	K.S.M.கருணாநிதி	K.N.சேகரன்	வாழவந்தான்கோட்டை தபால் நிலையம்
4.	மருங்காபுரி தெற்கு ஒன்றியம்	C.சின்னடைக்கன்	N.கோவிந்தராஜ்	செவல்பட்டி தபால் நிலையம்
5.	வையம்பட்டி வடக்கு ஒன்றியம்	R.சீரங்கன்	R.குணசேகரன்	N.பூலாம்பட்டி தபால் நிலையம்
6.	மருங்காபுரி மத்திய ஒன்றியம்	M.பழனியாண்டி	கவிஞர் சல்மா	மருங்காபுரி தபால் நிலையம்
7.	வையம்பட்டி தெற்கு ஒன்றியம்	V.A.ராஜேந்திரன்	அ.த.த.செங்குட்டுவன்	வையம்பட்டி ரயில்வே ஸ்டேசன்
8.	திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம்	C.கங்காதரன்	வண்ணை அரங்கநாதன்	கிழக்குறிச்சி தபால் நிலையம்
9.	துவாக்குடி நகரம்	E.காயாம்பு	பன்னீர் செல்வம்	வடக்கு துவாக்குடி மலை தபால் நிலையம்
10.	மணப்பாறை நகரம்	மு.ம.செல்வம்	M.மாரியப்பன்	திண்டுக்கல் ரோடு, மணப்பாறை தபால் நிலையம்,
11.	பொன்னம்பட்டி பேரூர்	K.A.நாகராஜ்	லீலாவேலு	துவரங்குறிச்சி தபால் நிலையம்
12.	கூத்தைப்பார் பேரூர்	கே.தங்கவேல்	இரா.மூக்கன்	கூத்தைப்பார் தபால் நிலையம்
13.	தெற்கு மாநகரம்	மு.மதிவாணன்	இனிகோ இருதயராஜ்	தெப்பக்குளம் தபால் நிலையம்

அன்பில் மகேஸ் பொய்யாமொழி,
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

52 வாரங்களில் 52 சீர்திருத்தங்கள் திட்டத்தின் கீழ்

தமிழ்நாட்டில் ரயில் பயணிகள் பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதா?

மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி. பிப்.10 -

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை ரயில்வே துறை தொடர்பாக எழுப்பிய கேள்விகள் வருமாறு:

(அ) “52 வாரங்களில் 52 சீர்திருத்தங்கள்” திட்டத் தில் தமிழ்நாடு உட்பட நாட்டில் பயணிகள் பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான குறிப்பிட்ட இலக்குகள் உள்ளதா. அப்படியானால். அதன் விவரங்கள் என்ன?

(ஆ) தேசிய அளவில் தொடருந்து விபத்துக்கள் குறைந்து ள்ளதாகக் கூறப்படுவதால் தமிழ்நாட்டில் ரயில் பாதைகளில் பாதுகாப்பு விளைவுகள் மேம்பட்டுள்ளனவா? அப்படியானால், அதன் விவரங்கள் குறிப்பாக செயல்பாட்டுத் திறன் நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் சேவை வழங்கலில் மேம்பாடுகளில் கவனம் செலுத்துகின்றன.

(இ) இந்திய ரயில்வேயால் ஏற்படும் மொத்த பட்ஜெட் ஆதரவு மற்றும் மூலதனச் செலவு தமிழ்நாட்டில் புதிய ரயில் சேவைகள், தண்டவாள புதுப்பித்தல் மற்றும் நிலைய மறுமேம்பாட்டுத் திட்டங்களுக்கு விகிதாசார ஒதுக்கீடு செய்ய வழிவகுத்ததா. அப்படியானால். அதன் விவரங்கள்;

(ஈ) தமிழ்நாட்டில் அதிக அடர்த்தி மற்றும் அதிக ஆபத்துள்ள வழித்தடங்களில் கவாச் தானியங்கி ரயில் பாதுகாப்பு செயல்படுத்தப்பட்டுள்ளதா. அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் நிலுவையில் உள்ள கவரேஜ்க்கான காலக்கெடு;

(இ) பூர்த்தி செய்யப்படாத ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவைத் தேவைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு தமிழ்நாடு மாநில அரசுடன் ஆலோசனை நடத்தியதா. அப்படியானால். அதன் விவரங்கள்;

(ஊ) இந்த சீர்திருத்தங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்கத்தால் ஏதேனும் சுயாதீன மதிப்பீடு அல்லது செயல்திறன் தணிக்கை நடத்தப்பட்டதா. அப்படியானால், அதன் விவரங்கள்;

(எ) இந்த சீர்திருத்தங்களை நீண்ட கால அடிப்படையில் நிறுவனமய மாக்குவதற்கும், செயல்திறன், நிர்வாகம் மற்றும் பயணிகள் திருப்தி ஆகியவற்றில் நிலையான முன்னேற்றங்களை உறுதி செய்வதற்கும் எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய ரயில்வே இணை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம் ஆரம்பாக்கம், ஊராட்சி நொச்சிகுப்பம் கிராமத்தில மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூபாய் 6.30 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கும் தளம் அமைக்கும் பணியை தலைமை செயற்குழு உறுப்பினர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மு.மணிபாலன், எஸ். ரமேஷ், கே.ஆறுமுகம், மு.கேசவன், எஸ்.ராமஜெயம், டி.மஸ்தான், அப்துல்கரீம், வேதசாலம், கே.வி. நாகராஜ், ஆ.மனோகரன், கே.சி.ராஜா, அங்கமுத்து, ரவி, அப்பாஸ், பார்த்திபன், பழனி, சேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.